# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 39/ந/2026, நாள் 14.05.2026**

R. துரைசாமி,
வெள்ளரி வெள்ளி, சேலம் மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
இடங்கணசாலை நகராட்சி, சேலம் மாவட்டம். — எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரி வெள்ளி அஞ்சல், கல்லப்பாளையம், எண். 8/171 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. துரைசாமி என்பவரது 24.11.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.11.2025 அன்று பெறப்பட்டு, 39/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரி வெள்ளி அஞ்சல், கல்லப்பாளையம், எண். 8/171 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. துரைசாமி என்பவரின் 24.11.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"நான் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகளில் பிளம்பர் உரிமம் பெற்று குடிநீர் திட்டத்தில் பொது மக்களுக்கு தனியார் வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்து வருகிறோம். தற்போது சேலம் மாவட்டம் இடங்கணசாலை நகராட்சியில் மேற்கண்ட பணிகள் செய்ய சேலம் மாவட்டம், இடங்கணசாலை நகராட்சியில் பிளம்பர் உரிமம் வேண்டி 09.05.2024 மற்றும் 24.09.2025 மனு செய்துள்ளேன். இந்த பிளம்பர் உரிமம் வழங்கப்படவில்லை. அதனால் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு 10.01.2025–ல் புகார் அளித்துள்ளேன். இதற்கு இன்னும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பிளம்பர் உரிமம் வழங்கப்படவில்லை.

ஆகவே, 1920–ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 306 (7)(b) மற்றும் பிரிவு 310(2)–ன் அரசாணைகளின்படி உள்ளாட்சி அமைப்புகளில் பிளம்பர் உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். உரிமம் பெற்ற பிளம்பர்கள்தான் பணிகள் செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள், 2023, நாள் 13.04.2025ல் திருத்தங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் உரிமம் பெற்ற பிளம்பர்கள் ஆகியோரின் உரிமத்தினை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்து கொள்ளலாம் என அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாராக இருப்பின் சேலம் மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி, சங்ககிரி பேரூராட்சியில் பிளம்பர் உரிமங்கள் பெற்று பிளம்பர்கள் பணிகள் செய்து வருகிறோம்.

ஆகவே, சேலம் மாவட்டம் இடங்கணசாலை நகராட்சியில் பிளம்பர் உரிமம் பெற்றுக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் இடங்கணசாலை நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. இடங்கணசாலை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.244/ 2026/சி1, நாள் 09.03.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சேலம் மாவட்டம், இடங்கணசாலை நகராட்சியில் உள்ள 1 முதல் 27 வார்டுகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், தனியார் வீடுகளுக்கு புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள நிரந்தர அரசு பணியாளர் பிட்டர் இருப்பதால் உரிமம் பெற்ற பிளம்பர் அவசியம் இல்லாததால் மனுதாரரின் கடிதம் நாள் 20.01.2024, 09.05.2024 மற்றும் 11.06.2024 காணும் கடிதத்திற்கு இடங்கணசாலை நகராட்சி கடிதம் நக.எண்.778/2024/இ1 நாள் 24.05.2024–ல் காணும் கடிதத்தில் இடங்கணசாலை நகராட்சியில் பிளம்பர் பணிக்கு அவசியம் இல்லாததால் உரிமம் வழங்க இயலாது என அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான இடங்கணசாலை நகராட்சி ஆணையர் ஆகியோரை 08.04.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நான் மற்ற உள்ளாட்சி அமைப்புகளின் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகளில் பிளம்பர் உரிமம் பெற்று தனியார் வீடுகளுக்கு புதிய குடிநீர் இணைப்புகள் மற்றும் பராமரிப்பு பணியினை செய்து வருகிறேன்.

இடங்கணசாலை நகராட்சியில் பிளம்பர் உரிமம் வேண்டி 09.05.2024 மற்றும் 24.09.2025–ல் மனு செய்துள்ளேன். எனக்கு பிளம்பர் உரிமம் வழங்கப்படாததை தொடர்ந்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு 10.01.2025–ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 306 (7)(b) மற்றும் பிரிவு 310(2)ன் அரசாணைகளின்படி உள்ளாட்சி அமைப்புளில் பிளம்பர் உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். மேலும் சேலம் நகராட்சி, தாரமங்கலம் நகராட்சி, சங்கிரி பேரூராட்சியில் பிளம்பர் உரிமங்கள் பெற்று பிளம்பர்கள் பணிகளை செய்து வருகின்றனர். மேற்கண்ட இடங்களில் பிளம்பர் மற்றும் பிட்டர்கள் பணியில் உள்ளனர்.

இடங்கணசாலை நகராட்சியில் பொறியாளர் பிரிவு அதிகாரிகள் குழாய் பொருத்துனர் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் பணியாளர்களை வைத்துக்கொண்டு உரிமம் பெற்ற பிளம்பர்களை வைத்து செய்ய வேண்டிய பணிகளை அவர்கள் செய்து அதற்கான கூலி தொகையை பல மடங்கு அதிகமாக அவர்களே பெற்றுக்கொள்கிறார்கள். ஆதலால்தான் பிளம்பருக்கு உரிமம் எனக்கு வழங்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே சேலம் மாவட்டம், இடங்கணசாலை நகராட்சியில் பிளம்பர் உரிமம் பெற்றுத்தரும்படி இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரரான இடங்கணசாலை நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 778/2024/இ1, நாள் 07.04.2026ல் 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பணி நடைபெற்று கொண்டிருப்பதால் நகராட்சி மேற்பார்வையாளர் திரு. வெ. திருநாவுக்கரசு என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி மேற்பார்வையாளர் திரு. வெ. திருநாவுக்கரசு என்பவர்

08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“இடங்கணசாலை நகராட்சியில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கல் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏதேனும் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரி செய்தல் போன்ற பணிகளுக்கு குழாய் பொருத்துநர் (Fitter) ஒருவர் நிரந்தமாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு இது தொடர்பாக விண்ணப்பம் செய்ததை தொடர்ந்து அதன் விளக்கம் இடங்கணசாலை நகராட்சியிடம் கேட்கப்பட்டது. விளக்கத்தில் இடங்கணசாலை நகராட்சியில் உள்ள மொத்த வார்டுகள் 27ல் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு மற்றும் மேல்நிலை தொட்டி இயக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக மொத்தம் 15 நிரந்தர மேல்நிலை தொட்டி இயக்குபவர்கள் (Turn Cork) நகராட்சியில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆகையால் இந்நகராட்சியில் தேவையான பணியாளர்கள் உள்ளனர் என்ற விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டு அதன் நகல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நிலையில் மனுதாரரின் கோரிக்கையினை பரிசீலிக்க இயலவில்லை.

இருப்பினும் மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரை பெற்று அதனைத்தொடர்ந்து நகர்மன்ற கூட்டத்தொடரில் இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான இடங்கணசாலை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேற்பார்வையாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகளில் பிளம்பர் உரிமம் பெற்றுள்ளதால் வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வருகிறார் என்பதும், பிளம்பர் உரிமம் வேண்டி இடங்கணசாலை நகராட்சியில் மனுக்கள் அளித்துள்ளார் என்பதும், இடங்கணசாலை நகராட்சியில் பிளம்பர் உரிமம் வழங்காதது குறித்து 10.01.2025ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரிடம் புகார் அளித்துள்ளார் என்பதும், உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலம் பணிகள் செய்யப்பட வேண்டும் என்பதால், 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 306 (7) (b) மற்றும் பிரிவு 310 (2)–ன்படி சேலம் நகராட்சி, தாரமங்கலம் நகராட்சி, சங்ககிரி பேரூராட்சியில் பிளம்பர் உரிமங்கள் பெற்று பிளம்பர்கள் பணிகளை செய்து வருகின்றனர் என்பதும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் உரிமம் பெற்ற பிளம்பர்களின் உரிமத்தினை திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023ன்படி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்து கொள்ள அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது என்பதும், இவ்விசாரணையின்படி சேலம் மாநகராட்சி, தாரமங்கலம் நகராட்சி, சங்ககிரி பேரூராட்சியில் பிளம்பர் உரிமங்கள் பெற்று பிளம்பர் பணிகள் செய்து வருகிறார் என்பதும், குழாய் பொருத்துனர் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் பணியாளர்களை கொண்டு உரிமம் பெற்ற பிளம்பர்களால் செய்ய வேண்டிய பணிகளை செய்து, கூலி தொகை பல மடங்கு உயர்த்தி பொறியாளர் பிரிவு அதிகாரிகள் பெறுகின்றனர் என்பதும், இடங்கணசாலை நகராட்சியில் பிளம்பர் உரிமம் பெரும்பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் நாடியுள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இடங்கணசாலை நகராட்சி குடிநீர் குழாய் இணைப்பு வழங்கல் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏதேனும் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரி செய்தல் போன்ற பணிகளுக்கு குழாய் பொருத்துநர் (Fitter) ஒருவர் நிரந்தரமாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளார் என்பதும், நகராட்சியில் பிளம்பர் பணிக்கு அவசியம் இல்லாததால் உரிமம் வழங்க இயலாது என கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005ன் கீழ் அளிக்கப்பட்ட மனுவிற்கு நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு மற்றும் மேல்நிலை தொட்டி இயக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக மொத்தம் 15 நிரந்தர மேல்நிலை தொட்டி இயக்குபவர்கள் (Turn Cork) நகராட்சியில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதால், நகராட்சியில்

தேவையான பணியாளர்கள் உள்ளனர் என்ற விவரம் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், இதன் விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதால் மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்க இயலவில்லை என்பதும், எனினும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுரை பெற்று, நகர்மன்ற கூட்டத்தொடரில் இப்பொருள் குறித்து தீர்மானம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான இடங்கணசாலை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி பணி மேற்பார்வையாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

எனவே, இந்நேர்வில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அறிவுரை பெற்று நகர்மன்றத்தின் ஒப்புதலோடு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக எதிர்மனுதாரரான இடங்கணசாலை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி பணி மேற்பார்வையாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதின்பேரில் உரிய அறிவுரைகளை வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2026–ஆம் ஆண்டு, மே திங்கள் 14–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R. துரைசாமி,
த/பெ. ராமசாமி
8/171, கல்லப்பாளையம், வெள்ளரி வெள்ளி அஞ்சல்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
இடங்கணசாலை நகராட்சி,
இடங்கணசாலை,
சேலம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.